விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆனி 21 ஷவ்வா 16 இதழ் 145
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 5-7-1985

★ 'லங்காபுவத்' மீண்டும் கூறுகிறது

# தீவிரவாதக் குழுக்களுக்கு இந்தியா எச்சரிக்கை!

## பேச்சுக்களுக்கு 4 இயக்கங்கள் இணக்கம்!!

(கொழும்பு)

'இலங்கை இனப்பிரச்னை குறித்து பூட்டானில் நடைபெறவுள்ள மகாநாட்டினைப் பகிஷ்கரிக்கப் போவதாகக் கூறிவந்த நான்கு தமிழ் தீவிரவாதக் குழுக்களும் தமது முடிவை மாற்றிக்கொண்டுள்ளன, பத்தாம் திகதி பூட்டானில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளப்போவதாகவும் அவை அறிவித்துள்ளன என்று ''லங்கா புவத்'' செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

''இந்து டைம்ஸ்'' பத்திரிகையை ஆதாரம் காட்டி 'லங்கா புவத்'' வெளியிட்டுள்ள இன்னுமொரு செய்தியில் இந்தியாவில் இயங்கி வரும் தீவிரவாதக் குழுக்களில் ஏதாவது வன்செயல்களில் ஈடுபடுமானால் அக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவார்

(7ம் பக்கம் பார்க்க)

★ பயங்கரவாதத் தடைச்சட்டம்

# காவலில் உள்ள 400 தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யும்படி சிபார்சு!

(பெஞ்சமின் இராஜரத்தினம்)

**பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களில் 400 பேரை விடுதலை செய்யும்படி பாதுகாப்பு அமைச்சுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் சிபார்சு செய்துள்ளது. இந்த இளைஞர்கள் குறித்த 'கோவை'களைப் பரிசீலித்த பின்னரே இத்திணைக்களம் மேற்கண்ட முடிவை எடுத்தது.**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் மீது வழக்குத் தொடரும் வகையில் அவ்விளைஞர்களின் 'கோவை' களை (பைல்கள்) சட்ட ரீதியான பரிசீலனைக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாதுகாப்பு அமைச்சு சமர்ப்பித்திருந்தது.

இக்கோவைகளைச் சட்டமா அதிபர் திணைக்களம் பரிசீலித்தபோது 400 தமிழ் இளைஞர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்வதற்கான தகுந்த ஆதாரங்கள் காணப்படவில்லை. இதனையடுத்தே அந்த இளைஞர்கள் அனைவரையும் விடுதலை செய்யும்படி பாதுகாப்பமைச்சுக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இச்சிபார்சினையடுத்து அவ்விளைஞர்கள் அனைவரும் விரைவில் விடுதலை செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆயினும் அவர்கள் தமது வசிப்பிடங்களில் குறிப்பிட்ட சில பகுதியிலேயே நடமாட அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

[8-ம் பக்கம் பார்க்க]

## அரசு படைகளை வலுப்படுத்துகின்றது! புலிகள் கண்டனம்

[சென்னை]

''இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான பூட்டான் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கவிருக்கும் நேரத்தில் இலங்கை அரசாங்கம் தமது ஆயுதப்படை

[8-ம் பக்கம் பார்க்க]

## இந்திய அரசைச் சந்தித்த பின்பே பூட்டான்பேச்சுபற்றி முடிவு!

### த. வி. கூ. அறிவிப்பு

[சென்னை]

''இனப்பிரச்னை குறித்து இலங்கை அரசுடன் பூட்டானில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வது சம்பந்தமாக இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியபின்னரே தீர்மானிக்கப்படும்'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணி நேற்று சென்னையில் நிருபர்களுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இலங்கை இனப்பிரச்னை குறித்து எதிர்வரும் 10-ந் திகதி பூட்டானில் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைக் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் ''பொலிட் பீரோ'' நேற்று சென்னையில் கூடி ஆராய்ந்தது அப்பொழுதே இந்த முடிவு எடுக்கப்பட்டது

இதேவேளை டில்லியில் இந்திய அரச பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும், பூட்டான் பேச்சுக்கள் பற்றி தகுந்த முடிவு எடுப்பதற்கும் மூவரைக் கொண்ட உயர் மட்டக்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது இக்குழுவில்

8-ம் பக்கம் பார்க்க)

## மூதூர் மாணவிகளை விடுதலைசெய்ய பணிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைதான மூதூரைச் சேர்ந்த இரு மாணவிகளை விடுதலை செய்யும்படி சட்ட மாஅதிபர் திணைக்களம் பணித்துள்ளது.

மூதூர் சென். ஆன்ஸ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த புவனேஸ்வரி குமாரசாமி [வயது 7]. கடந்த 10-9-84 இலும், மூதூர் சம்பூர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாலினிதேவி வேலாயுதம் (வயது 18) 13-9-84 இலும் சி. ஐ. டி. பொலிசாரினால் கைதானார்கள்.

இந்த மாணவிகள் சார்பில்

[8-ம் பக்கம் பார்க்க]

## கார்கடத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி வாசலில் வைத்து நேற்றுமாலை கார் ஒன்று கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## மருதனமடத்தில் வழிப்பறி

[மானிப்பாய்]

மருதனமடம் சந்தியிலிருந்து இணுவிலை நோக்கி சைக்கிளில் சென்றுகொண்டிருந்த நபர் ஒருவரிடம் இனந்தெரியாத நபர்கள் இருவர் துப்பாக்கியைக் காட்டி அவரிடமிருந்த ரொக்கப் பணத்தை வழிப்பறி செய்

(8-ம் பக்கம் பார்க்க

## பூட்டான் செல்லும் குழுவில் தமிழ் மொழிபெயர்ப்பாளர்!

[கொழும்பு]

பூட்டான் செல்லவிருக்கும் இலங்கை அரச தரப்புக் குழுவில் பாராளுமன்ற தமிழ் மொழிபெயர்ப்பாளரான திரு. எஸ். குமாரசாமியும் அங்கம் பெறுகின்றார்.

இவர் இலங்கைப் பாராளுமன்றத்தில் சிரேஷ்ட தமிழ் மொழிபெயர்ப்பாளராகப்பணி புரிகின்றார். பூட்டான் மகாநாட்டு விடயங்களை உடனுக்குடன் தமிழில் மொழிபெயர்க்க

(8ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் படகு, வள்ளம் மறைவு!

[கொழும்பு]

திருமலைத் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு படகும், அதனோடு நின்ற வள்ளமும் காணாமல் போயுள்ளன. இவற்றுக்குக் காவலாக அமர்த்தப்பட்டிருந்த 14 வயதுச் சிறுவன் ஒருவனையும் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போன படகின் பெறுமதி 1 லட்சத்து 64 ஆயிரத்து 300 ரூபாவாகும் என்று அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார் இச்சம்பவம் இரு தினங்களுக்கு முன்னரே இடம்பெற்றது

படகுகளுக்குப் பாவிக்கும் டீசல் எண்ணெயும் இச்சம்பவத்தில் பெருமளவு கொள்ளையடிக்கப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது திருமலைப் பொலிஸார். இது தொடர்பான புலன் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## ''பொய் சொல்லாது உண்மையை கூறுங்கள் என்றார் யாழ் ஆயர்''

### வண. பிதா சிங்கராயர் சாட்சியம்

(கொழும்பு)

''பொய் சொல்ல வேண்டாம். உண்மையைக் கூறுங்கள். நான் உங்களுடனிருப்பேன்'' என்று யாழ். ஆயர் அதி வண. தியோகுப்பிள்ளை என்னிடம் தெரிவித்தார்.

இவ்வாறு வண பிதா ஆபரணம் சிங்கராயர் கொழும்பு மேல் நீதிமன்றில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்

அவசர காலச் சட்டத்தின்கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி சேனநாயக்கா முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டுவருகின்றது.

வண. பிதா சிங்கராயர் தொடர்ந்து கூறியதாவது;- குருநகர் முகாமில் பிரிகேடியரின் அறையில் யாழ் ஆயர் அதி வண தியோகுப்பிள்ளை, அநுராதபுரம் ஆயர் அதி வண. ஜோய் குணவர்த்தன, வண பிதா மைக்கேல் சுவாமி, வணபிதா பேர்னாட்குயின்டஸ், பொலிஸ் உத்தியோகத்தர்கள் விஜேசூரியா, ஹில்டன் பெரேரா ஆகியோர் இருந்தனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸாரால் சுடப்பட்டு மரணம்!

[மூதூர்]

மூதூரில் நேற்று முன்தினம் சீருடை அணிந்த தீவிரவாதி ஒருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அரசு

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ் - கொழும்பு இன்ரசிற்றி சேவை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு - யாழ்ப்பாணம் இன்ரசிற்றி கடுகதி புகையிரத சேவை திங்கள், புதன், வெள்ளி, ஞாயிறு ஆகியநான்கு தினங்கள் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை-காங்கேசன்துறை இன்ரசிற்றிரயில் சேவை திங்கள், புதன், வெள்ளி ஆகிய வழமையான வாரநாட்களில் இடம் பெறும்.

காங்கேசன்துறை-கொழும்பு கோட்டை இன்ரசிற்றி சேவை மேலதிகமாக ஞாயிற்றுக்கிழமையுடன் சேர்த்து திங்கள், புதன் வெள்ளிக்கிழமைகளில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர விபரம் வருமாறு: கோட்டையிலிருந்து காலை 5-45 மணிக்குப் புறப்பாடு யாழ்ப்பாணம் சேரல் 11-55, கே. கே. எஸ். சேரல் நண்பகல் 12 20.

காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 2-15 மணிக்குப் புறப்பாடு யாழ்ப்பாணம் பி ப 2-35 சேரல், கொழும்பு கோட்டை இரவு 8-50 சேரல்.

## Wanted
## SALES REPS

We are looking for energetic persons with ongoing personality to handle sales. Prior experience is an added advantage. Call over personally between 1-30 p.m. and 3 p.m. on 6-7-85 Saturday for interview.

**dyn ads marketing**
476, Main Street, Chundikuli, Jaffna.

## North Ceylon Private Medical College

Application forms for admission to the North Ceylon Private Medical College may be obtained from the Secretary, 106, Main Street, Jaffna. (Tel. 23251 Jaffna).

Minimum qualifications are the same as those prescribed by the University Grants Commision for admissions to Universities in Sri Lanka.

The closing date for applications will be 31st, July, 1985. 4210

## TEACHING POSTS
## North Ceylon Private Medical College

Applications are invited from suitably qualified person for fulltime and part-time posts of Heads of Departments, Lecturers and Demonstrators in Anatomy, Physiology and Biochemistry

Terms and hours of work - negotiable

Please apply to the Secretary, 106, Main Street, Jaffna. 4209

## அறிவித்தல்

அவசர பராமரிப்புப் பணிகளை முன்னிட்டு கீழ்க் காணும் பிரதேசங்களில் 07-07-85 ம் திகதி காலை 7 30 மணி தொடக்கம் மாலை 4-30 மணிவரை மின் சாரம் இடைநிறுத்தி வைக்கப்படும் என்பதை மின் நுகர்வாளர்கள் தயவுகூர்ந்து கவனத்தில் எடுக்கு மாறு அறிவிக்கப்படுகின்றனர்.

**துண்டிக்கப்படும் பிரதேசங்கள்**

சுன்னுகம், காங்கேசன்துறை, வேலணை, யாழ்ப் பாணம், வட்டுக்கோட்டை, பருத்தித்துறை.

இம் மின்சார இடை நிறுத்தத்தினுல் பாதிப்புறும் சகல மின் நுகர்வாளர்களிடமிருந்தும் அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின் றது.

மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இ. மி ச. சுன்னுகம் . 4214


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**D. சேனுதிராஜா குரூஸ்**
M. H. D I கும்பகோணம் L C O. இலங்கை
[பல் கட்டுபவர், கண்பரிசோதகர்)



மலர்வு: 13-6-1937

உதிர்வு: 5-7-1982

எம்மைச் சடுதியாய் ஆருத்துயரில் ஆழ்த்தி மறைந்தாலும் இருள் சூழ்ந்த இக்காலங்களிலும் எம்மை மறவாது தெய்வமாய் நின்று எங்களைக் காத்த எம் குல விளக்கே எப்படி மறப்போம் உம் துணையை.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்; மனைவி, மக்கள், சகோதர சகோதரிகள், மைத்துனன்மார், மைத்துனிமார் மற்றும் உறவினர்கள்.
இல! 9, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [4175]


## சிறு விளம்பரம்

### தேவை

றேடியோ திருத்துபவர் தேவை. நேரில் காலை 8 மணி முதல் 5 மணிக்குள் வரலாம். ரெலிகோணர், மொடர்ன் மாக்கற், சாவகச்சேரி. 4159

யாழ் நகரில் நிறுவனமொன்றுக்கு கணக்கு வேலைகளில் அனுபவமுள்ளவரும், முகாமைத்திற அனுபவசாலியுமான ஒருவர் தேவை. வயதுவந்தவர்கள், அல்லது அரசாங்கத்தில் ஓய்வுபெற்றவர் விரும்பத் தக்கது. நேரில் வரவும்: பிராங் போட் எலெக்றிக்கல்ஸ், முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். 4217

### விற்பனைக்கு

நல்ல இன முயல் குட்டிகள் விற்பனைகளுண்டு. தொடர்பு: விமாகி பாம், கோப்பாய் தெற்கு, கோப்பாய். 4189

Table Fan K D K Timer, Night Lamp சிறிது காலம் பாவித்தது. Sri Murugans, 140, K. K. S. Road, Jaffna. 4204

16, ஆசீர்வாதம் ஒழுங்கையில் (ஆஸ்பத்திரி வீதி) இருக்கும் 1 1/4 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: இ. ஆர் திருச்செல்வம், 16, ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 4205

### FOR SALE

Pure bred alsation pups (6 weeks) and Japanese Pits (2 months for immediate Sale. M Balasingam. No 9, Rakka Road, Jaffna Telephone No: 24414 and 24791. 4216

### பயிற்சி வகுப்பு

மருத்துவ தாதி பயிற்சி [Nurse Training Diploma Course] ஆரப்பமாகவுள்ளது. G. C. E O/L, A/L சித்தியடைந்தவர்கள் 20-7-85 முன் விண்ணப்பிக்கவும். அதிபர், உயர்கலைக் கல்லூரி. ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். 4206

**A. L. 87**
A. மகாதேவா B. Sc
அவர்களின்
இரசாயனவியல்
ஆரம்பம்:
06-07-1985
பிற்பகல் 3-00—4-00
**Shine Institutes Tellippalai**
4181

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை
## ஒப்பந்தக்காரரைப் பதிவு செய்தல்

பெரும்பாலும் திருத்த வேலைகளைக் கையாள்வதற்காக அனுபவமுள்ள கட்டட ஒப்பந்தக்காரரை யாழ். பல்கலைக்கழகத்தில் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பகாரர் தங்களுடைய முன் அனுபவங்களை அத்தாட்சிப்படுத்துவதற்குரிய ஆவணங்களுடன் 1985-07-24ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்,
இலங்கை,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.
03-07-1985 4213


## வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, கனடா, செல்வதற்கான
சகல ஒழுங்குகளும்,
பிரான்ஸ், ஜெர்மனி செல்வதற்கான
சிறந்த வசதிகளும்,
குறைந்த செலவில் காலதாமதமின்றி
செய்து கொடுக்கப்படும்
வெள்ளி, சனி, ஞாயிறு வரை

வ. நல்லையா,
அளவெட்டி வடக்கு - அளவெட்டி.
[3913]


## 3-வது ஆண்டு நினைவுநாள்

செல்வன்
**சி. ரவிக்குமாரன்**
(CHIEF OFFICER. MERCHANT VESSEL)



தோற்றம்:
10-1-1953


மறைவு:
8-7-1982

என்றும் உன் நினைவு நிலைத்து நிற்க
இன்றும் எமது அஞ்சலிகள்.

- குடும்பத்தினர்

'குமாரோதயம்',
கல்லூரி வீதி, காங்கேசன்துறை. 4208

## 60-ம் நாள் நினைவஞ்சலி



**செ. பரமசோதி**

பிறப்பு: 25-12-1951 மரணம்: 6-5-1985

கழகத்தின் போஷகராய் இருந்து வழிகாட்டி பல வழியிலும் உதவி செய்து இளவயதில் இறைவனடி சேர்ந்த தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

உறுப்பினர்கள்
**காரை. விளையாட்டுக் கழகம்**
காரைநகர். (4200)

## 31-வது நாள் நினைவஞ்சலி

**கணபதிப்பிள்ளை இராமலிங்கம்**
(உரிமையாளர், லீலா ஸ்ரோர்ஸ், வெலிகம)



பிறப்பு:
6-2-1920

இறப்பு:
6-6-1985

அன்னரின் ஆன்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

114, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [4177]

# பங்களாதேஷில் 11 பேர் கொண்ட

# புதிய அமைச்சரவை உதயம்!

## 8 பேர் ஜனதள் கட்சிக்காரர்

(டாக்கா)

பங்களாதேஷில் 11 பேர் கொண்ட புதிய அமைச்சரவையொன்றை ஜனாதிபதி எர்ஷாத் அமைத்துள்ளார் தற்போது இது ஒரு முழுமையான அமைச்சரவையாக விளங்குகிறது.

இந்த 11 அமைச்சர்களில் 8 பேர் ஜனாதிபதி எர்ஷாத்தின் ஜனதள்கட்சியைச் சேர்ந்தவர்கள். ஏனைய மூன்று அமைச்சர்களும் பங்களாதேஷில் உள்ள மூன்று சிறிய எதிர்க்கட்சியில் அங்கம் வகிப்பவர்கள் நாட்டின் இராணுவ ஆட்சி அகற்றப்பட்டு புதிய தேர்தல்கள் நடத்தப்பட்டு, புதிய பாராளுமன்றம் ஒன்று ஏற்படுத்தப்படுவதற்கு அமைவாக பல கட்சிகளையும் கொண்டதொரு அமைச்சரவை அமைக்கப்படவேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கு இணங்க தமது முன்னைய அமைச்சரவையை ஜனாதிபதி எர்ஷாத் கடந்த ஜனவரி மாதம் கலைத்திருந்தார். அதன்பின்னர் அமைச்சரவை இல்லாதநிலையிலேயே நாடு இருந்துவந்தது.

தற்போது இந்த புதிய அமைச்சரவை அமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் இதிலும் எர்ஷாத் தலைமையில் இயங்கும் ஜனதள் கட்சியினரே அதிகமாக அமைச்சரவையில் இருப்பதினால் இந்த அமைச்சரவையையும் எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ளுமா என்பதில் ஐயப்பாடுகள் நிலவுகின்றன.

## பங்களாதேஷ் ஜனாதிபதி சீனாவுக்கு விஜயம்

(டாக்கா)

பங்களாதேஷ் ஜனாதிபதி லெப்டினட் எர்ஷாத் வரும் அக்டோபர் மாதம் சீனாவுக்கு விஜயம்செய்யவுள்ளார்.

இவர் தமது பதவிக்காலத்தில் ஏற்கனவே ஒருமுறை சீனா சென்றுள்ளார்.

பங்களாதேஷ் ஜனாதிபதியின் இந்த விஜயம் பொருளாதார ஒத்துழைப்பு இராணுவ உதவிகளை பெறுவதற்காகவே இடம்பெறுகிறது என்று கூறப்படுகிறது.

## இந்தியாவின் புதிய விமானப்படைத் தளபதி

(புதுடில்லி)

இந்தியாவின் புதிய விமானப்படைத் தளபதியாக எயர் மார்சல் டி ஏ லாப்பாண்டன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதுவரை மேற்குப் பிராந்திய விமானப் படைக்கு பொறுப்பாக இருந்தார்.

அண்மையில் காலமான விமானப்படைத் தளபதி எயர் ஷிப் மார்சல் எல். எம். கத்ரேயின் இடத்துக்கு இவர் இப்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

# ராஜீவ் பெருந்தன்மை

## தென்னக சஞ்சிகை பாராட்டு!

[சென்னை]

''இலங்கை அரசின் ஏச்சுக்களையும், சவால்களையும் மனதில் வைத்துக்கொள்ளாமல் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை இன்முகத்துடன் வரவேற்ற நமது பிரதமர், வங்கதேசப் புயல் கொடுமைகளை நேரில் கண்டு ஆறுதல் கூறத் தன்னுடன் அவரையும் அழைத்துச் சென்றார்.

இலங்கையை விட எல்லா வகையிலும் வலிமைமிக்க நாடான இந்தியா விட்டுக் கொடுக்கும் உயர்பண்பாடுடையது என்பதற்கு இந்த வரவேற்பு உதாரணமாகத் திகழ்கிறது''.

இவ்வாறு சென்னையில் வெளியிடப்படும் ஆனந்த விகடன் இவ்வார தலையங்கத்தில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் டில்லியில் சந்தித்ததுபற்றி எழுதியுள்ளது.

தமது தலையங்கத்தில் மேலும் தெரிவிப்பதாவது:

''தமது ரஷ்ய விஜயத்தின் போது அந்தநாட்டு தலைவர்களுடன் இலங்கைப் பிரச்னை பற்றிப் பிரதமர் விரிவாகப் பேசியதாகச் செய்தி வந்தது. அப்படியிருக்கும்போது ஜெயவர்த்தனாவிடம் திட்டவட்டமான கருத்துக்களை பிரதமர் சொல்லாமல் இருந்திருக்க மாட்டார். பேச்சுவார்த்தை பற்றிப் பத்திரிகைகளுக்கு விரிவான செய்தி வரவில்லை''.

## ஆரம்ப சுகாதார சேவை பன்முகத் திட்டம்

(மாவிட்டபுரம்)

ஆரம்ப சுகாதார சேவையை பன்முகப்படுத்தும் திட்டத்தின் கீழ் கிராமோதய ஆரம்ப சுகாதார நிலையங்களை நிறுவ சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

மேற்படி திட்டத்துக்கமைய காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி எல்லைகுள் உள்ள 26 குடும்பநல சேவையாளர் பிரிவுகளிலும் மேற்படி நிலையம் நிறுவும் வேலைகள் நடைபெற்றுவருகிறது.

மேற்படி நிலையம் கிராமப்புறத்தில் ஆரம்ப சுகாதார கண்காணிப்பில் நாட்டம்செலுத்தும்.

## தெல்லிப்பழை புற்றுநோய்—— சிகிச்சை நிலையத்தை ஆரம்பிக்கக் கோரிக்கை!

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட புற்றுநோய் நிலையத்தை உடன் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கும்படி அவசர கோரிக்கை ஒன்று சுகாதார அமைச்சருக்கு வைத்தியசாலைக் கமிட்டியால் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கமிட்டியின் தலைவரான திரு ஈ. சபாரத்தினத்தால் அனுப்பப்பட்ட அவசர கோரிக்கையில்:

'தாங்கள் காலியில் ஒரு புற்று நோய் தடுப்பு நிலையம் ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ளதாக அறிவித்திருப்பது பெரும் சந்தோசத்தை அளித்துள்ளது அதே நேரத்தில் வடபகுதி புற்றுநோயாளர் படும் கஷ்டத்தையும் உடன் நீக்கும் வகையில் தெல்லிப்பளை நிலயத்தையும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கும்படி கோருகிறோம்.

இங்குள்ளவர்கள் கண்டி, காலி, மகரகம ஆகிய இடங்களில் உள்ள நிலையங்களுக்கு போய் சிகிச்சை பெறப்பயம் அடைகிறார்கள். ஆகவே செல்லிப்பளையில் எடுத்துச் செல்லப்பட்ட 'கோபால்ட்' யூனிட்டை திருப்பி ஒப்படைத்து இதை உடன் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவும்.

தற்சமயம் நிலைமையும் சீரடைந்துள்ளதால் இதை இயக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய— பாக் இருதரப்பு உறவுகள் வளரும்

## இரு நாடுகளும் திருப்தி

புதுடில்லி, ஜூலை 4

இந்தியாவும் பாகிஸ்தானும் தமக்கிடையே இருதரப்பு உறவுகளை வளர்த்துக்கொள்ள பெருமளவுக்கு இணங்கியுள்ளன

இந்திய—பாகிஸ்தான் குழுவினருக்கிடையே புதுடில்லியில் இடம்பெறும் கூட்டுக் கமிஷன் பேச்சுவார்த்தைகளில் இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது விவசாயம், கால்நடை வளர்ப்பு, வர்த்தகம், போக்குவரத்து ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கு இந்த பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்டது. பாகிஸ்தானுக்கு இந்தியா கோதுமையை ஏற்றுமதிசெய்வதுதொடர்பான பேச்சுக்களும் இடம்பெற்றதாக கூறப்படுகிறது.

இப்பேச்சுக்களில் கலந்துகொள்ள இந்தியா வந்திருக்கும் பாகிஸ்தானிய வெளிநாட்டமைச்சர் யாக்கூகான் நேற்று உப ஜனாதிபதி வெங்கட்ராமனையும். பாதுகாப்பு அமைச்சர் சி பி நரசிம்மராவையும் சந்தித்து பேசினார்

## விம்பிள்டன் போட்டிகள்———

# உலக சாம்பியன் மக்கன்ரோ தோல்வி

லண்டன், ஜூலை, 4

உலகின் தலைசிறந்த விம்பிள்டன் டெனிஸ் ஆட்டக்காரரும், தற்போதைய விம்பிள்டன் டென்னிஸ் சம்பியனுமாகிய ஜோன் மக்கன்ரோ விம்பிள்டன்டென்னிஸ் போட்டியின் கால் இறுதியாட்டத்தில் முற்றிலும் எதிர்பாராத வகையில் தோல்வி கண்டுள்ளார்

இவர் தற்போது டெனிஸ் உலகில் 8-வது ஆட்டக்காரர் எனக் கருதப்படும் கெவின் கரனிடம் 2-6, 2-6, 4-6 என்ற கணக்கில் தோல்வி கண்டார் இவரது தோல்வி விம்பிள்டன் உலகில் முற்றிலும் எதிர் பாராத தோல்வி எனக் கருதப்படுகிறது

அமெரிக்காவின் ஜிம்மி கோணர்ஸ் மாத்திரம் தற்போது இறுதியாட்டத்துக்கு தெரிவாகியுள்ளார் இவர் சிலி நாட்டின் ரிக்காடோ அக்கோடாவை 6-1, 7-6, 6-2 என்ற கணக்கில் தோற்கடித்தார். கெவின் கரனும் இறுதி ஆட்டத்துக்கு தெரிவு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# குடும்பச்சச்சரவால் நஞ்சருந்தி மரணம்

[மாவிட்டபுரம்]

வீட்டில் மனைவி, பிள்ளைகளுடன் ஏற்பட்ட சச்சரவையடுத்து மனமுடைந்த குடும்பஸ்தர் ஒருவர் நஞ்சருந்தி உயிரைப் போக்கிக் கொண்டார்

அளவெட்டியைச் சேர்ந்த முத்துக்குமாரு சுப்பிரமணியம் 53 வயது) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

சம்பவதினம் காலமானவர் மதுபோதையில் வீட்டுக்கு வந்து பிள்ளைகளுடன் சச்சரவுபட்டதாகவும், இதனை மனைவி கண்டிக்கவே அவரை காலமானவர் தாக்கியதாகவும் இதையடுத்து மனைவி ''இங்கு வீட்டில் இருக்க முடியாது'' என்று கூறி வெளியே சென்றதாகவும், இதன் பின் காலமானவரும் புறப்பட்டு வயற்பக்கம் சென்றதாகவும், அங்கு வைத்து நஞ்சருந்தியதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

மனைவி சுப்பிரமணியம் அன்னலட்சுமி, தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி செல்வி கனகமலர் ஸ்ரீகாந்தா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

மரணவிசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா தற்கொலையென தீர்ப்பளித்தார்.

## தெங்கு – பனம் பொருள்

# கூட்டுறவு சங்கங்களில் கொள்ளை

# சீவல் தொழிலாளர் கண்டனம்!

[கொழும்புத்துறை]

''தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களில் கொள்ளைகள் இடம்பெறும்போது விடுதலை இயக்கங்களின் பெயர்கள் பூதாகரப்படுத்தப்படுவதால் நல்ல இலட்சிய நோக்கங்களுக்காகச் செயற்படும் அமைப்புக்களின் மேல் சீவல் தொழிலாள சமூக மக்களுக்கு இருந்துவந்த ஏற்பட்டிருந்த ஈடுபாடும் நல்லெண்ணமும் அருகத் தொடங்கியுள்ளது''

இவ்வாறு வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் கருத்தரங்கில் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இக் கருத்தரங்கு வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க சமாஜத் தலைவர் திரு த. சிவலிங்கம் தலைமையில் யாழ் கே கே எஸ் வீதியிலுள்ள சமாஜக் காரியாலயத்தில் நடைபெற்றது

வடபகுதியிலுள்ள தெங்கு-பனம் பொருள் கூட்டுறவுச் சங்களில் அடிக்கடி இடம்பெற்றுவரும் கொள்ளைச் சம்பவங்களைக் கண்டிக்கும் முகமாகவும், அண்மையில் கோப்பாய் தெங்கு-பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தில் துப்பாக்கி, கைக்குண்டு சகிதம் நுழைந்த சில வாலிபர்கள் அங்குகடமையிலிருந்த ஊழியர்களை அடித்து உதைத்துக் கட்டிவைத்து இம்சைப்படுத்திப் பணம் தட்டச்சு இயந்திரம் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்ற சம்பவத்தைக் கண்டிக்கும் முகமாகவும் இக்கருத்தரங்கு நடாத்தப்பட்டது

இக்கருத்தரங்கில் இச்சங்கங்களையும், சீவல்தொழிலாளர்களையும் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் பற்றி ஆராயப்பட்டதடன் பின்வரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது:-

''தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் தனித்துவம் வாய்ந்த சமூக அமைப்பாகும் இச்சங்கங்கள் உருவாக்கப்பட்ட பின்னரே வடபகுதிச் சீவல் தொழிலாளர் குடும்பங்களின் வாழ்வில் பொருளாதார சமூக விடுதலையை ஓரளவுக்கேனும் காணக்கூடியதாக இருந்தது ஆனால் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நெருக்கடியினால் சங்கங்கள் இயங்க முடியாது தடுமாறிக் கொண்டிருக்கையில் கொள்ளையர்கள் இயக்கங்களின் பெயரால் சங்கங்களினுள் புகுந்து மனிதாபிமானமற்றமுறையில் ஊழியர்களைத்தாக்கி இம்சைப்படுத்தியும், பணம், உபகரணங்களைக் கொள்ளையடித்துச் செல்வதையும் சீவல் தொழிலாளர் சமூகம் வன்மையாகக் கண்டிப்பதுடன் தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடும் தூய உள்ளங்களின் கவனத்திற்கும் இதனைக் கொண்டுவருகின்றோம்''

### மணிவாக்கு

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு

— திருக்குறள்

## நமது நோக்கு

# செய்தித் திரிப்பும் தூதரக மறுப்பும்!

நாட்டில் அவ்வப்போது இடம்பெறும் சம்பவங்களை அப்படியே பத்திரிகைகள் வெளியிடுவதனுல் விபரீதங்கள் விளையக்கூடும் என்ற கருத்தில் தணிக்கைமுறை புகுத்தப்பட்டது. இந்தத் தணிக்கையைப் பயன்படுத்திக்கொண்டு அரசுக்கு சார்பாக செய்தி வெளியிடும் பாவனையில் சில செய்தியாளர்கள் உண்மையைத் திரித்தும் பொய்களை சோடித்தும் வெளியிடுகின்றனர். இதனுல் அரசுக்கு நன்மை கிடைப்பதைவிட முகத்தில் கரிபூசிக்கொள்ளும் நிலைமையும் ஏற்பட்டுவிடுகின்றது.

அதற்கு ஓர் எடுத்துக்காட்டுதான் ''லங்காபுவாத்'' தமிழ்த் தீவிரவாதிகளை இந்திய அரசு எச்சரித்துள்ளதாக வெளியிட்ட சோடிப்பு.

அரச கட்டுப்பாட்டிலுள்ள தொடர்பு சாதனங்களுக்கே செய்தி வழங்கும் இந்த செய்திமுகவர் ஸ்தாபனத்தின் மேற்படி செய்தி இலங்கை வானெலியிலும் தொலைக்காட்சியிலும் மிக முக்கியத்துவம் கொடுத்து அறிவிக்கப்பட்டது. ஆனுல் அதில் எதுவித உண்மையும் இல்லைஎனஇலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலய தகவல் அதிகாரி திருமதி லக்ஷ்மிபூரி மறுத்திருப்பது மேற்படி செய்தி முகவர் நிலையத்துக்கு மட்டுமல்ல அச்செய்தியைப் பெரிதுபடுத்திஅறிவித்த தொடர்பு ஸ்தாபனங்களுக்கும் தலைக்குனிவைத்தருவதாகும் அது மட்டுமல்ல கடந்த காலத்திலும் இவ்வாறன செய்திகளை இந்த முகவர் நிலையம் இவ்வாறுதான் திரிவுபடுத்தியும் சோடித்தும் வெளியிட்டிருக்கக் கூடும் என்ற சந்தேகத்தையும் எழுப்புகின்றது.

தமிழ்நாட்டில் தமிழ்த் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்கள் இருக்கின்றன வென்ற இலங்கை அரசின் குற்றச்சாட்டுக்களை மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி காலத்திலிருந்தேஇந்தியஅரசு மறுத்து வந்துள்ளதை நாம் அறிவோம். அப்படியிருக்க ''ஆறு மணிநேரத்தில் தமிழ் நாட்டிலுள்ள தீவிரவாதிகளின் முகாம்களை அழித்து தலைவர்களையும் கைதுசெய்ய முடியும்'' என இந்திய அரசு எச்சரிக்கை விடுத்திருக்க முடியுமா? அவ்வாருயின் இந்தியாவில் தமிழ்த் தீவிரவாதிகளின் முகாம்கள் உண்டு என்பதை ஏற்றுக்கொண்டதாகவல்லவாமுடியும். அந்த அளவுக்கு இந்திய ராஜதந்திரம் கீழ்இறங்கிவிட்டதாக எவர் கருதுவார்? எனவே எச்சரிக்கை பற்றிய செய்தி வெளியான உடனேயே இது வெறும் 'கயிறு திரிப்பு' என்றுதான் விஷயம் புரிந்தவர்கள் கருதியிருப்பார்கள்.

போர் நிறுத்தம் ஒன்று அறிவிக்கப்பட்டதின் பின்னரும்கூட வன்செயல்கள் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளன. இதுகுறித்து தீவிரவாதிகள் அரசின் நடவடிக்கைகளையும் அரசு தீவிரவாதிகளையும் மாறி மாறி குற்றஞ்சாட்டுகிருர்கள் எனவே இந்திய அரசு எச்சரிப்பதாயின் இருதரப்பையுமே எச்சரித்திருக்க வேண்டும். ஆனுல் இருதரப்பினரையுமே பகைவர்களாகக்கருத இந்திய அரசு தயாராகவில்லை. இவர்களைச் சந்திக்கவைத்து சுமுகமான அரசியல் தீர்வொன்று உருவாக உழைத்துவரும் அவர்கள், ராணுவ கெடுபிடிகளுக்கு அஞ்சி தஞ்சம் புகுந்துள்ள இலங்கை தமிழ் இளைஞர்களை அரவணைத்து பாதுகாத்துவரும் அவர்கள் ஒருதலைப்பட்சமாக எச்சரிக்கை விடுத்துக்கொண்டும் சுமுக சூழ்நிலை உருவாவதைக் குழப்பிக்கொண்டுமிருப்பாரிகள் என்று கருதமுடியுமா? நல்ல சூழ்நிலை உருவாகி வருவதை இம்மாதிரியான செய்திகள்தான் குழப்பி, திசை திருப்பிவிடக் கூடும் என்று திருமதி பூரி கூறியிருப்பது முற்றிலும் உண்மை.

### இன்று

(புலோலி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மணவாளக் கோல திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

அன்றைய தினம் பகல் 1008 சங்காபிஷேகமும் பிற்பகல் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும்.

### விழாக்காண் நற்பதி

சீர்பல கொண்டே சிறந்த நற்பதியாம்
நீர்வேலிப் பதிமேவி விக்னேஸ்வரன்
கருணை மழையால் உயிர்களைக் காப்பான்
அவனருள் வேண்டி அடியவர் கூட்டம்
நாளும் வந்தே நன்மைகள் எய்தும்
வினைகள் அகல மேனிலை எய்தும்
அருள்பொழி வாய்க்கால் தரவை நாயகர்க்கு
குடமுழுக்காய விழாவினை நிகழ்த்தி
நீர்வேலிப் பதிமகிழ்ந்தது நன்றே

— சர்மா

"இளைஞர்கள் ——

# முதியோர் அனுபவங்களை உதாசீனம் செய்யலாகாது!"

## இளைஞர் ஆண்டுக்கருத்தரங்கில் உரை

(கரவெட்டி)

''ஒருநாடு இளைஞர்களை மாத்திரம் கொண்டதல்ல குழந்தைகள், முதியவர்கள் உட்பட வாழ்வின் அனைத்துப் பிரிவினரையும் அதுகொண்டு விளங்குகின்றது. எனவே இளைஞர்கள் முதியவர்களின் அனுபவங்களை உதாசீனம் செய்யாது, அவற்றினைக் கிரகித்து மிதமான போக்கைக் கடைப்பிடிக்கவேண்டும். சமநிலையுள்ள மிதமான நிலைமையினை நேக்கித்தான் உலகிலுள்ள எல்லாத்தீவிர சக்திகளும் கால ஓட்டத்தில் மாறியுள்ள நிலையை வரலாற்றிலிருந்து காணமுடிகிறது'' என்று சர்வதேச இளைஞர் ஆண்டினையொட்டி உடுப்பிட்டி கல்வி வட்டார அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய யாழ். மாவட்ட திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு. வி. எஸ். சுவாமிநாதன் தெரிவித்தார்.

நெல்லியடி இராசலிங்கம் மண்டபத்தில் உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு. வி. கே. ஈசுரபாதம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது.

''ஒரு சமுதாயத்தின் முதுகெலும்பான இளைஞர்களின் பிரச்சினைகளை சரியான கண்ணேட்டத்துடன் அணுகுவதன் மூலமே, அச்சமுதாயத்தில் அமைதியும் பாதுகாப்பும் கலந்த அபிவிருத்திக் குகந்த சூழ்நிலையை உருவாக்க முடியும்'' என்றூர்

உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஈசுரபாதம் தமது தலைமையுரையில், ''இளைஞர்களின் வாழ்க்கை இன்று கேள்விக்குறியாக அமைந்துள்ளது. பல இலட்சம் இளைஞர்கள் இன்று உலகில் வேலையற்று நடுத்தெருவில் நிற்கின்றனர். இதையடுத்தே ஐ. நா. சபை இந்த ஆண்டை இளைஞர் ஆண்டாக பிரகடனம் செய்திருக்கிறது. எனவே நாமும் எமது இளைஞர்களை நல்வழிப்படுத்தி அவர்களிடத்திலே மனச்சான்றுகளை உருவாக்கி சமுதாயத்தில் நீதியையும் அமைதியையும் ஏற்படுத்தவேண்டும்'' என்றூர்.

விளையாட்டுத்துறைக் கல்வி அதிகாரி திரு. வி. தங்கராஜா பேசுகையில் ''எமது இளம் சந்ததியினர் மத்தியில் உடல் நலம் அருகிவருவதை பாடசாலைகள் கவனத்திற்கொண்டு விளையாட்டு நிகழ்ச்சிகள் போன்றவற்றில் முக்கிய கவனம் எடுக்கவேண்டும்'' என்றூர்.

## மக்கள் கருத்து

### நுளம்புத் தொல்லை

குருநகர் றெக்கிளமேசன் பகுதியில் நுளம்புத் தொல்லை மிக மோசமாகியுள்ளது. இப்பகுதியில் இரவில் எவரும் நித்திரை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. முன்பெல்லாம் மழை காலத்தில் மட்டுமே இருந்து வந்த இத்தொல்லை கடந்த சில வருடங்கள் தொடக்கம் வருடம் முழுவதும் நிலவி வருகிறது.

யாழ்ப்பாணத்திலேயே மக்கள் தொகை அதிகமாகவும் மிக நெருக்கமாகவும், அத்துடன் சுகாதார வசதிகளும் குறைந்ததாகவும் உள்ள பகுதி எமது குருநகர் றெக்கிளமேசன் பகுதியே ஆகும்.

யாழ்ப்பாணத்தில் தொற்று நோய் அபாயம் ஏற்படும் போதெல்லாம் மிகவும் பாதிப்புக்குள்ளாகும் பகுதியும் எமது பகுதியே. நாம் பலமுறை இப்பகுதியில் உள்ள நுளம்புத் தொல்லைபற்றியாழ் மாநகராட்சி நிர்வாகத்தினருக்கு முறைப்பாடு செய்வதும் சமீபகால நெருக்கடி நிலை காரணமாக எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் இப்பகுதியில் ''மலத்தின் தெளிப்பாளர்கள்'' அடிக்கடி சைக்கிள்களில் தங்கள் கருவிகளுடன் வந்துபோவதைக்காண்கிறேம் ஆனுல் அவர்கள் அம்மருந்தை எங்கு தெளிக்கின்ருர்கள் என்பதுதான் எமக்குஇதுவரைதெரியவில்லை. இப்பகுதியில் இராணுவ முகாம் இருந்தபோது ஓரிரு சர்ந்தப்பங்களில் ''மலத்தின் தெளிப்பாளர்கள்''களை நாம் இடைமறித்து எமது குறைகளைச் சொல்லி எமது பகுதியில் தெளிக்கச் சொன்னபோது அவர்கள் தமக்கு இராணுவ முகாமுக்குள் தெளிக்கும் படிதான் பணிப்புரை என்றுசென்றுவிட்டார்கள். இப்படியான தட்டிக்கழிப்பால் எமது பகுதி மக்கள் தொடர்ந்தும் சொல்லொணுத் தொல்லைக்கு (துளமபு) ஆளாகிவருகிருர்கள்.

எனவே, தற்போது நெருக்கடி நிலைமை ஓரளவு சீரடைந்துள்ளதால் தயவுசெய்து தங்கள் பகுதி''மலத்தியன்தெளிப்பாளர்'' களை மிகவிரைவில் இப்பகுதிக்கு அனுப்பி எமது நிலையத்துடன் தொடர்பு கொண்டு இச்சேவையைச் செய்யப் பணிக்குமாறு மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேம்.

— சென் றேயல் சனசமூக நிலையம்.
குருநகர்.
யாழ்ப்பாணம்.

# 75 ஆண்டு நிறைவுகண்ட மானிப்பாய் இந்துக்கல்லூரி

யாழ். குடா நாட்டிலே மானிப்பாய் ஒரு பிரபல்யம் வாய்ந்த முன்னேற்றமடைந்த கிராமமாகும். இங்கே உதித்த தவப்புதல்வர்கள் இக் கிராமத்துக்கு என்றும் அழியாப்பெருமையைத் தேடித் தந்துள்ளார்கள். திரு. ஏ. குமாரசாமிப் பிள்ளை, சேர். முத்துக்குமாரசுவாமி, டாக்டர் ஆனந்தக் குமாரசாமி, சேர். பொன்னம்பலம் இராமநாதன், சேர். பொன்னம்பலம் அருணுசலம் போன்ற பல பெரியவர்களை இந்நாட்டிற்கு தந்து இக் கிராமம் பெருமை அடைந்துள்ளது. இக் கிராமத்திற்கும் இதனைச் சூழ்ந்துள்ள சுதுமலை, ஆனைக்கோட்டை, சண்டிலிப்பாய், நவாலி போன்ற கிராமங்களுக்கும் கலங்கரை விளக்கமாக தோன்றுவது மானிப்பாய் இந்துக் கல்லூரி என்ற ஒப்பற்ற ஸ்தாபனமாகும்.

இக் கல்லூரி நேற்று ஜுலை மாதம் 4-ந் திகதி தனது75-வது ஸ்தாபக தினத்தைக் கொண்டாடியது. கிறிஸ்தவ மிஷனறிகளிடம் முற்றுக ஆங்கில கல்விப் போதனை இருந்த காலத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது.

ஜுலை மாதம் 4-ந் திகதி முன்னை நாள் பிரதம நீதியரசா சேர். யோசப் ஹட்சிங்கென் என்பவரால் அத்திபாரமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

மேன்மைதங்கிய சேர். சங்கரப்பிள்ளை சனசபைஉடையார் எஸ். கே. லோட்டன் என். எஸ். இராமலிங்கம் முதலியார் போன்ற பல பெரியார்களின் விடாமுயற்சியால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலை இன்று வட மாகாணத்தில் மட்டுமல்லாது, இலங்கையிலே ஓர் முன்னிலைப் பாடசாலையாக விளங்குகின்றது. நாங்கள் இன்று மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் வாழ்கின்றேம். எமது சமயம் மொழி, வாழ்க்கைமுறை என்பன அபாய நிலையில்உள்ளன. இளைஞர்களின் எதிர்காலம் நிச்சயமற்றதொன்ருகி விட்டது இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஸ்தாபகர்களிடம் இருந்த குறிக்கோள் நேற்றுவரை நிறைவேற்றப்பட்டுவந்தாலும் இன்றைய சூழ்நிலையில் ஓர் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. இந்நிலையிலும் இக்கல்லூரி சகல முயற்சிகளையும் மேற்கொண்டு எதிர்நீச்சல் போட்டு மாணவர்களின் முன்னேற்றத்திற்காகவும் எமது கலாசாரத்தை பாதுகாப்பதற்காகவும் இடைவிடாது பாடுபட்டு வருகின்றது.

சுவாமி விபுலானந்த அடிகள், கூட்டுறவுத் தந்தையும் முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினருமான உயர்திரு வி. வீரசிங்கம், திரு. நவரட்ணம், திரு. க. முத்துவேற்பிள்ளை, திரு. மு. பேராயிரவா, திரு. எஸ். வெங்கடசாரி. போன்ற உறுதியான அதிபர்களின் நிர்வாகத்திறமையினுலும், இடைவிடாத முயற்சியினுலும் இக் கல்லூரி துரித வளர்ச்சியடைந்தது.

### ச. க. ம மோகன்

கடமை கண்ணியம், கட்டுப்பாடு என்ற கொள்கையுடைய திரு. வி. வீரசிங்கம் அவர்கள் இக் கல்லூரியின் ஆற்றலை கல்வி ரீதியாகவும் விளையாட்டு ரீதியாகவும் அகில இலங்கைக்கும் தெரிவுபடுத்தினுர். ஒரு பாடசாலை முன்னேற்றமடைவதற்கு அப்பாடசாலையின் இடவசதியே முக்கியமானது, என்ற கருத்தை உடையவர் திரு. க. முத்துவேற்பிள்ளை அவர்கள், இக் கல்லூரியிலே இன்றுகாணப்படுகின்ற அநேக கட்டிடங்கள் இவரது காலத்திலேயே கட்டப்பட்டவையாகும் அரசாங்கத்தினுல் இப் பாடசாலை பொறுப்பேற்கப்பட்ட பின்பு பல சந்தர்ப்பங்களில் நிதி நெருக்கடிகள் தோன்றியும் ஏற்கனவே கட்டப்பட்ட கட்டிடங்களை பராமரிப்பதிலும் பாடசாலை விஸ்தரிப்புக்காக பெரியகட்டிடம் கட்டுவதிலும் இவர் செய்த தொண்டு ஈடு இணையற்றதாகும் இக்கல்லூயின் வளர்ச்சியில் பழைய மாணவர்களின் பங்கும் முக்கிய...தொன்ருகும். பாடசா...ன் முன்னேற்றத்திற்காக பழைய மாணவர்கள் அவ்வப்போது தம்மால் இயன்றவரை உதவி செய்து வருகின்ருர்கள். இவர்களின் முயற்சியால் கடந்த சில ஆண்டுகளாக பாடசாலையை விட்டு வெளியேறியவர்களுக்கான தொழில் நுட்பக் கல்வி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திரு. மஸ்கன் சுப்பிரமணி

அதி உ...
சோ...
ZNP இது பல்நோக்கு திர...
...ர் போஷ...
பொஸ்பரக...
ஆகியவற்றுடன்...
பயிர்...
போஞ்சி, பட்டாண...
திராட்சை, மிளகாய், வெங்...
A PRODUCT OF
LEFFINGWELL
A BUSINESS OF
UNIROYAL CHEMICAL UNIROYAL

...மை யுரை யில்
...ளின் வாழ்க்கை
...ள் விக்கு றியாக
...ளது. பல இலட்சம்
... இன்று உலகில்
... நடுத்தெருவில்
...ர். இதையடுத்தே
...ப இந்த ஆண்டை
...ஆண்டாக பிரகட
...ருக்கிறது. எனவே
...து இளைஞர்களை நல்
...ழி அவர்களிடத்
...ச்சான்றுகளை உரு
...தாயத்தில் நீதியை
...தியையும் ஏற்படுத்
...'' என்றார்.

...ட்டுத்துறைக் கல்வி
...திரு. வீ. தங்க
...சுகையில் ''எமது
...தியினர் மத்தியில்
...ம் அருகிவருவதை
...ள் கவனத்திற்
...விளையாட்டு நிகழ்ச்
...ன்றவற்றில் முக்கிய
...க்கவேண்டும்'' என்

## ...ண்ட
## ...ல்லூரி

...ப்படுகின்ற அரச
...ர் இவரது காலத்தி
...ட்டப்பட்டவையா
...சாங்கத்தினல் இப்
... பொறுப்பேற்கப்
...பின்பு பல சந்தர்ப்
...தி நெருக்கடிகள்
...ம் ஏற்கனவே கட்
...கட்டிடங்களை பரா
...ம் பாடசாலை விஸ்
... பெரியகட்டிடம்
...ம் இவர் செய்த
... ஈடு இணையற்றதா
...லூரியின் வளர்ச்சி
...ய மாணவர்களின்
...முக்கிய...னதொன்
...டசா...ன் முன்
...ற்காக பழைய
...ர் அவ்வப்போது
...யன்றவரை உதவி
...கின்றார்கள். இவர்
...பற்சியால் கடந்த
...களாக பாடசாலை
... வெளியேறியவர்க
...தொழில் நுட்பக்
...பிக்கப்பட்டுள்ளது.
... சுப்பிரமணி

## ஆசார சீலர்



கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக வல்வை சிவன் கோவிலின் ஆதீனகுருவாகவும் பிரதம குருக்களாகவும் விளங்கிய பிரம்மஸ்ரீ நீ. பரமேஸ்வரக்குருக்கள் அவர்கள் 26-6-85 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். குருக்கள் ஐயா அவர்கள் ஆலயநித்திய நைமித்திய கருமங்களைச் செவ்வனே நடாத்தி வந்ததோடு வல்வை வாழ் மக்களின் மங்கல வைபவங்களையும் சிறப்புற நடாத்தி அவர்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். ஆசாரசீலராகவும் வழிகாட்டியாகவும் விளங்கிய அன்னார் ஊர்மக்களின் அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரியவராக வாழ்ந்துவந்தார். குருக்கள் ஐயா அவர்களின் திடீர் மறைவு வல்வை வாழ் மக்களுக்கு பேரிழப்பாகும் அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு வல்வை மக்கள் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஓர் அன்பர்

யத்தின் ஞாபகமாக அவரது குடும்பத்தாரால் நன்கொடையாக கட்டி கொடுக்கப்பட்ட தொழில் நுட்ப கூடத்தில் அரசாங்கத்தி்ன் அனுமதியுடன் இவர்களுக்கு தொழில் நுட்பக் கல்வி போதிக்கப்படுகிறது.

பல பேராசிரியர்கள், கலாநிதிகள், பொறியியலாளர்கள், வங்கி முகாமையாளர்கள் ஆசிரியர்கள் பிரபல வர்த்தகர்கள் போன்றவர்களை தோற்றுவித்த இக் கல்லூரி இன்றும் பல ஆண்டுகள் எம் சமுதாயத்திற்கு சேவை செய்யவேண்டுமென்று பிராத்திக்கின்றோம்.

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சைவத் தமிழ்ப் பண்பாட்டைப் பேணி வைதீக முறையில் வாழ்கின்ற அந்தணப் பெருமக்களைக் காண்பது அருகி வருகிறது என்று சிவ ஸ்ரீ ச. சர்வேஸ்வரக் குருக்கள் அவர்களை கௌரவித்து நடைபெற்ற பாராட்டு விழாவில் ஏழாலை சைவசமய அபிவிருத்தி சங்கத்தலைவர் திரு. சி. சக்திகிரவன் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் தமிழ்ப்பண்பாடும் சைவக்கலாச்சாரமும் திட்டமிடப்பட்டு அழிக்கப் பட்டு வரும் காலகட்டத்தில் பழமையைப் பேணும் ஆலய சிவாச்சாரியார் போன்றோரைப் பாராட்டுவது போன்றத்தக்கதாகும் என்றும் கூறினர்.


# NEW COMMERCE ACADEMY.

B. M. C. LANE, JAFFNA

A/L 86, 87

கலை, வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம்: 07-07-1985

விபரங்கட்கு:

New Master Institute,

B. M. C. LANE, JAFFNA.


## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

யாழ். அபிவிருத்திச் சபையின் வெற்றிடமாக உள்ள கீழ்வரும் பதவிகளை ஒப்பந்த அடிப்படையில் (Contract basis) ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்கு நிரப்புவதன் பொருட்டு 60 வயதுக்கு மேற்படாத இளைப்பாறிய உள்ளூராட்சிச் சேவை/அரசாங்க சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(அ) எழுது வினைஞர்.

(ஆ) தொழில் நுட்ப உத்தியோகத்தர் (சிவில்)

(இ) தொழில் நுட்ப உத்தியோகத்தர் (மின்சாரம்)

02. விரும்புவோர் தங்கள் விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை தங்கள் பிறப்புச் சாட்சிப்பத்திரம், மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளுடன், பிரதிச் செயலாளருக்கு [நிர்வாகம்] 19-07-1985 க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகிறது.

03. மேலதிக விபரங்கள் தேவைப்படின் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாணம்.

[4215]


# UNIVERSAL AGENCIES

அவுஸ்திரேலியா, பேர்லின், கனடா, சவுதி அரேபியா, குவைத், சிங்கப்பூர், ஓமான், மற்றும் இடங்களுக்கு பிரயாண வசதிசெய்து கொடுக்கப் படும்

கொழும்பு, கட்டுநாயக்காவரை போக்குவரத்துச் சேவை, காசோலை இலவசமாகஎடுத்துக்கொடுத்தல் முதலியனவும் பொன்ட், பாஸ்போட், விசா முதலியன துரிதமாய் பெற்றுக்கொடுக்கப்படும்.

நீங்கள் செல்ல விரும்பும் இடங்கள் வரை எமது பிரதிநிதி உங்களுடன் வருவார்.

மேலதிக விபரங்களுக்கு உடனடியாக கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.

## 'யூனிவேசல் ஏஜென்சிஸ்'

125 (455), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக]

முகாமையாளர் A திருஞானதீபன்

உரிமையாளர் - P. தங்கவேலாயுதம் (4197)

# A/L 87 SCIENCE CLASSES

## பிரிவு II ஆரம்பம்

## 07-07-1985 ஞாயிறு

| | | | | |
|---|---|---|---|---|
| 11-30 | — | 12-30 | — | Botany |
| 12-30 | — | 1-30 | — | Zoology |
| 1-30 | — | 2-30 | — | Physics |
| 2-30 | — | 3-30 | — | Chemistry |

## பிரிவு I நடைபெறுகின்றது

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9-30 | — | 10-30 | — | Botany | — | திரு. குகாதரன் |
| 10-30 | — | 11-30 | — | Zoology | — | திரு நாகநாதன் |
| 11-30 | — | 12-30 | — | Physics | — | திரு வர்ணம் |
| 12-30 | — | 1-30 | — | Chemistry | — | திரு தில்லைநாதன் |

PURE and APPLIED } Maths - திரு. நல்லையா

9-30 a. m. — 11-30 a. m.

விபரங்கட்கு:

New Master Institute,

B. M. C. LANE JAFFNA.

...தி உச்ச விளைச்சலுக்கு

...சார்பா-ஸ்பிரே®

பாவியுங்கள்




...பல்நோக்கு திரவம். இலையினூடாக செயலாற்றும் வளமாக்கி.

...ர் போஷாக்கு:- நாகம் 2% (Zn) நைதரசன் 10% (N)
பொஸ்பரசு 12% P 2 O 5, கந்தகம் 1% (S) அடங்கியது.

நியுட்ருபோஸ் N, நியுட்ருபோஸ் K,
ஆகியவற்றுடன் கலந்துதெளிக்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

பயிர்கள்:- நெல் மற்றும் சிறுதானியப் பயிர்கள்,
...போஞ்சி, பட்டாணி, கோவா, பூ கோவா, கரட், உருளைக்கிழங்கு,
..., மிளகாய், வெங்காயம், பூச்செடிகள் ஆகியவற்றிற்கு உகந்தது.

ANGLO-ASIAN FERTILISERS
அங்லோ-ஏஷியன்
பேர்ட்டிலைசர்ஸ் லிமிட்டட்,
சாற்ரட் வங்கி கட்டிடம், கொழும்பு-1.

...ODUCT OF ...NGWELL ...NESS OF ...HEMICAL UNIROYAL

R யுனிறோயல் டிரேட் மார்க்:

# "இறைவணக்கத்தை அவமதிக்காத பண்பு வேண்டும்"

## விரிவுரையாளர் பேச்சு

(வண்ணார்பண்ணை)

"இறைவனைத் தொழுவதற்கான அறிவோ, ஆற்றலோ இல்லாத மனிதனாக இருந்தாலும், இறைவணக்கத்தை அவமதிக்காதிருக்கும் பண்பு எந்த மனிதனுக்கும் இருக்கவேண்டியதவசியமாகும்.

ஒரு ஆலயத்தின் அருகில் உள்ள வீதியால் சுவாமி தேரிலோ, சப்பறத்திலோ வீதிவலம் வரும்போது அவ்வீதி ஓரத்தில் எழுந்து நின்று வணங்குபவர்கள் இருப்பார்கள், இன்னும் சிலர் இருந்த இடத்தைவிட்டு அசையாதிருப்பார்கள், வேறுசிலர் துவிச்சக்கரவண்டியில் நின்றபடி காணப்படுவர். ஆனால் எங்காவது பச்சை வாகனங்கள் வருவதறிந்தால் ஓடி அடங்கிவிடுகின்றோம். எதற்குப் பயப்படவேண்டும். எதைமதிக்கவேண்டும் என்ற உணர்வு மனிதர்களுக்கு இருக்கவேண்டும்".

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக இந்து மன்ற ஆண்டு விழாவில் "இந்து நெறி" வெளியீட்டுக்கு ஆய்வுரை நிகழ்த்திய தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராஜா ஒரு கட்டத்தில் தெரிவித்தார்.

## பக்தியை வளர்க்கும் மருதபிள்ளை

(சுழிபுரம்)

"தெய்வ வழிபாட்டையும், அமைதியாக வாழும் வழியைக் காட்டுபவராகவும் விளங்கி வருபவர் திரு சி. மருதபிள்ளை ஆசிரியர் மருதமரம் நிழல் தந்து, பக்தியைவளர்ப்பது போல் ஆசிரியர் திரு சி. மருதபிள்ளையும் எமக்கு இறைவனை நினைக்கச் செய்து பக்திமகர்க்கத்தை மேன்மையுறச் செய்து வருகிறார்.

சங்கரத்தை கரைப்பிட்டி ஆலயபரிபாலன சபைத் தலைவர் சட்டத்தரணி எஸ் ஆர். கனகநாயகம் சைவமணி திரு. சி, மருதபிள்ளையைப் பாராட்டி ஆலயத்தில் நடைபெற்ற வைபவத்தில் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

## சமாதானசபை உறுப்பினர்கள்

[வண்ணார்பண்ணை]

மல்லாகம சன்மார்க்க சமூக நல சமாதான சபையின் நீதி விசாரணைக்குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: செல்வன் பெ. ரஞ்சன், செயலாளர்:- திரு. மு தவயோகராசா, பொருளாளர்;- பெ. நவரட்ணலிங்கம், 14 பேர் கொண்ட செயற்குழுவும் தெரியப்பட்டுள்ளது.

சமூகநலச் சபையின் மகளிர் பேரவையின் தலைவியாக திருமதி நா. தவமணி, உபதலைவி: செல்விசி செல்வவசந்தினி, செயலாளர்: செல்வி வ. மார்க்கிறெட், உபசெயலாளர்: செல்வி சு கமலினி, பொருளாளர்: செல்வி பெ. வசந்தி உப பொருளாளர்; செல்வி பொ. டொறின், போஷகர்:- திருமதி விமலாதேவி தவயோகராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# இன்றைய பலன்

மாதம்: ஆனி
திகதி:21 [1985-7-5]வெள்ளி
திதி: திருதியை பிற்பகல் வரை.
நக்ஷத்திரம்: திருவோணம் மு. ப. வரை.

மேடம்: தெய்வநம்பிக்கையில் அதிக ஆர்வப் பிறக்கும் புண்ணிய ஸ்தலயாத்திரையொன்றை மேற்கொள்ளப் படலாம் உற்சாகமானதினம்.

இடபம்: எதிர்பார்த்த பொருள் வரவுக்கு இடமுண்டு பூமியால் லாபமுண்டு. புத்திர வழியாலும் நன்மையுண்டு.

மிதுனம்: சிறிய விடயம் கூட இன்று சிரமமாகத் தோன்றும். உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும். வாய்வுப் பதார்த்திரங்களை தவிர்த்துக் கொள்ளவும்.

கடகம்: இதயத்தில் இனிமை துள்ளும், பகைவர்கள் பணிவர். பரந்த நோக்குடன் செயற்படுவதன்மூலம் பொதுமக்களின் பாராட்டும் கிடைக்கும்.

சிங்கம்: வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும், சிறிய தலையிடிக்கும் இடமுண்டு நிதானத்துடன் நடந்து கொள்ளவும்.

கன்னி: எதிலும் மந்தநிலை தென்படும், கடன்தொல்லை அதிகரிக்கலாம், தனிவழிநாட்டம் ஏற்படும், இன்றுபொறுமையைப் பேணவும்.

துலாம்: புனைந்துரைகளால் மனது புண்படும் அதிகாரப் போதையில் தவறுகள் நடக்கும், வேண்டுவது பொறுமை.

விருச்சிகம்: ஆராய்ச்சியாளர்களுக்குப் பொன்னானதினம் அறிவுத்தாகம் மேலிடும். இனபந்துக்கள் கொண்டாட்டமும் உண்டு

தனுசு: உண்மை இன்று ஊமையாகிவிடும் உதவிசெய்யப் பேய் உபத்திரகதை விலைக்குவாங்கிக் கொள்வீர்கள், சிலர் வாழ்க்கையில் வணமுடை ஏற்படும்.

மகரம்: இடர்கள் பலதாக்கும் இதயத்தில் எரிமலைகுமுறும், உதவி செய்யப்போய் உபத்திரத்தை அணைத்துக் கொள்ள நேரிடும்.

கும்பம்: துண்டிக்கப்பட்ட தொடர்பு மீண்டும் துளிர்விடுவதற்கு இடமுண்டு, இனிமையான பேச்சின்மூலம் எதிர்பாராத வரவமுண்டு.

மீனம்: அன்னியர்களுடன் பழகுவதால் அதிக கவனஞ் செலுத்தவும், சகோதரர் மூலம் பிரச்சினை உருவாக்கலாம், எதிலும் அவதானம் வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்


## பேர்லின் பிரயாணம்

JULY 8, 10, 12, 13 திகதிகளில் பிரயாணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நிச்சயமான திகதி மாற்றமில்லாத பிரயாணம்.

**யாழ்-கொழும்பு-பங்கொக் வரை**

எமது பிரதிநிதி உங்களுடன்.

★ கொழும்பில் தங்குமிட வசதி.
★ பிரயாண காசோலை.
★ பாஸ்போட். பொண்ட், விசா அனைத்துக்கும்

**லிப்ருஸ் லிமிட்டெட்,**

R. G. பில்டிங், 70,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

COLOMBO

LIBRAS LTD.
PAUL VI CENTRE,
24, FRONT STREET,
COLOMBO-1



கோடி அற்புதங்கள் புரியும்

# புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலய வருடாந்த உயர் திருவிழா



இயேசு "உங்களுக்குச் சமாதானம்"

5-7-1985 வெள்ளி பிற்பகல் 3-30 மணி

★ கொடியேற்றம்

7-7-85 ஞாயிறு காலை 8-00 மணி

★ விசேடபூசை ★ நற்கருணைப்பந்தி
★ அருள்மிகு அந்தோனியார் தேர்ப்பவனி
★ பக்தர்களுக்கு அற்புதரின் ஆசி

நாட்டில் இனப்பகை, கொலை, கொடுங்கோல் அழியவும், ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலை கிடைக்கவும், சமாதானம், சகவாழ்வு நிலவவும், சொந்தத் தேவைகள் கிட்டவும் பக்தர்கள் விழாவில் பங்குகொண்டு அருள் தொண்டரிடம் இறைஞ்சுமாறு அழைக்கின்றோம்.

உயர் திருவிழா குருக்கள்

**அருள்திரு. சாமிநாதன் பிரான்சீஸ் கிருபானந்தன் அடிகள்**

அன்பளிப்பு:-

சென்றி அன்ரனி ஸ்ரோர்ஸ், பிரதான வீதி, ஊர்காவற்றுறை.

'அண்ணா கோப்பி' அண்ணா தொழிலகம், இணுவில் யாழ்ப்பாணம்.

எஸ். வி முருகேசு, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ., (புடவை மாளிகை) பெரியகடை யாழ்ப்பாணம்.

நியூ சரவணாஸ், (புடவை மாளிகை) பஸ் நிலயம், கிளிநொச்சி

வீற்றோ றேட்ஸ், (மின்சார ஒப்பந்தகாரர்) ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

செ. தில்லைநாதன், J P புங்குடுதீவு-11.

'டைமன் தேயிலை' டைமன் தொழிலகம், விநியோகஸ்தர். மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(4201)

# அநுராதபுரம் அகதி கண்டியில் மரணம்!

(வவனியா)

அனுராதபுரத்திலிருந்து அகதியாக வவனியா வந்து அகதி முகாமில் தங்கி இருந்தவர்பின் தனது சொந்த ஊரான கண்டிக்கு சென்றபோது அங்கு மரணமாகியுள்ளார் என அறிவிக்கப்பட்டது.

அனுராதபுரத்தில் நீண்ட காலமாக வசித்துவந்த பிரபல அரசாங்க கட்டிட ஒப்பந்தகாரரான திரு. கே. செல்வராஜா என்பவரே அகதியாக வவனியா வந்திருந்தார்.

அண்மையிலேயே தனது சொந்த ஊரான கண்டிக்கு சென்றிருந்தார். அவர் அங்கு மரணமானுர் என வவனியாவிற்கு தகவல் கிடைத்தது.

மரணத்திற்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை. அனுராதபுர சம்பவத்தில் இவரது உடமைகளுக்குபலத்த சேதம் ஏற்பட்டது. அனுராதபுரத்தில் இவர் குடியிருந்த வீடு முற்றுக சேதப்படுத்தப் பட்டதாகவும் தெரியவருகின்றது.

## தீவிரவாத......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்படுவார்கள் என்று இந்திய அரசாங்கம் கூறியதாகவும் அறிவித்துள்ளது.

இலங்கையில் வன்செயலை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்திருக்கும் இந்திய அரசாங்கம் அடுத்த மாத இறுதிக்குள் முகாம்களை மூடிவிடுமாறு சென்னையிலுள்ள தமிழ் தீவிரவாதக் குழுக்களுக்கு அறிவித்தல் கொடுத்துள்ளதாக ''ஸ்டேட்ட்மன்'' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் ''லங்கா புவத்'' அறிவித்துள்ளது. [ரா]

## இன்று

(மாவிட்டபுரம்)

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி வருடாந்த இல்லப் போட்டிகள் இன்று (5-7-85) நடைபெற விருக்கிறது.

ஆடம்பரமற்ற முறையில் நடாத்தப்படும் இப்போட்டிக்கு கல்லூரி அதிபர் திரு ஆர். சண்முகரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## ஷண்முகார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

வண்ணை அருள்மிகு ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் இன்று காலை 7-15 மணிக்கு ஸ்நபனுபிஷேகமும், 8-30 மணிக்கு நியாசபூர்வ ஷண்முகார்ச்சனையும், மாலை 4-00 மணிக்கு சந்தனக்காப்புச் சாத்தப்பெற்ற செந்தில்குமரனுக்கு நியாசபூர்வ ஷண்முகார்ச்சனையும், 5-00 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் சுவாமி உள்வீதி வலம்வருதலும் நடைபெறும்.

## இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலயத்தில் வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் 6ம்தேதி சனிக்கிழமை தியானவழிபாடும் 7ம் தேதி ஞாயிற்றுக்கிழமை விசேட பூசையைத் தொடர்ந்துஅருள்மிகு அந்தோனியார் தேர்பவனியும் நடைபெறும்.

அருள்மிகு சுவாமிநாதன் பிரான்சிஸ் கிருபானந்தன் அடிகள் உற்சவத்தை நிறைவு செய்துவைப்பார் 7ம் தேதி வீரமாமுனிவர் கலைக்கழகம் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடு செய்துள்ளது.


**வின்ஸர்**
வெண்திரையில்
தினசரி 10-30, 2-30
**GANDHI**
காந்தி அடிகள்
மகாத்மாகாந்தி அடிகளின் உண்மையான வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் ஓவியம், பல கோடி டாலர்கள் செலவில் தயாரிக்கப்பட்ட பிரமாண்டமான படைப்பு. முதன்முறையாக யாழ்நகரில் காண்பிக்கப்படும் புதிய வெளியீடு.

**வெலிங்டன்**
10-30 — 2-15 — 4-15
**Midnight Express**
(திகிலூட்டும் சம்பவங்கள் நிறைந்தது)

**லிடோ** சினிமா
10-30 — 2-30
பாண்டியன் — ரேவதி நடித்த
**'புதுமைப் பெண்'**
(ஈஸ்ட்மன் கலர்)

**தேவி மினி** சினிமா
(வின்ஸர் அருகாமை)
தினசரி 4 காட்சிகள்
'CRUEL PASSION''
ஆங்கிலம்
கண்டிப்பாக வயது வந்தவர்க்கு மட்டும்.

**லிபேர்ட்டி மினி**
(வெலிங்டன் சந்தி அருகாமை)
தினசரி 10-30, 2-30, 4-30
DANGER DIABOLIC
மயிர்க்கூச்செரியும் கார் ஓட்டமும், சண்டைகளும் நிறைந்தபடம்.

**ராஜா** தியேட்டர்
யாழ்ப்பாணம்
From; 3-7-85
Daily 10-30, 2-30, 4-30 p m.
**"SPLASH"**
(color)
"Paradise" - "Blue Lagoon"
படங்களைவிட மிகச் சிறந்த படம்
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

**உஷா மினி**
(கே. கே. எஸ். வீதியில் முட்டாசுக்கடை சந்திக்கும் வை. சி. சி. கு. கடை சந்திக்கும் மத்தியில்)
தினசரி 10-30, 2-30 மட்டும்
எம். ஜி. ஆர். சரோஜா தேவி
சத்யாமூவீஸ்
**தெய்வத்தாய்**
4-45 மட்டும்
BRUCE LEE FIGHTS BACK FROM THE GRAVE

**நியூசாந்தி (மினி)**
(யாழ். சாந்தி சினிமாவில்)
தினசரி 10-30, 2-15, 4-4
**"The First Turn On"**
(Adults only)
அநேக ரசிகர்கள் விருப்புக்கிணங்க தொடர்ந்து காண்பிக்கப்படுகிறது!

**S. T. L. மினிசினிமா**
(திருநெல்வேலி)
காட்சி 10-30 1-30
சிவாஜி - பத்மினி
**தங்கப்பதுமை**
4-30 PM.
ஜேம்ஸ் பொன்ட்
**Never Say Never Again**
பயங்கர சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

**குமரன்** மினி சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
புதிய வெளியீடு
10-30, 2-30
ரஜனிகாந்த் - மாதவி நடித்த
**உன் கண்ணில் நீர் வழிந்தால்**

**மொடேர்ண் மினி சினிமா**
(ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை)
**Survival Zone**
திகிலூட்டும் மோட்டார் சைக்கிள் ஓட்டத்துடன் கூடிய சண்டைப் படம்.

**மேபெயர் மினி**
(கன்னதிட்டி)
காலை 10-30 5-30
மோகன்—ஜெயஸ்ரீ
**தென்றலே என்னைத் தொடு**
2.30 p. m.
WHERE EAGLES DARE
(War Flim)

**ஸ்ரான்லி மினி 'A'**
10-30, 12-15, 2-15, 4-15
**First Blood**
பொலிசாரின் பிடியிலிருந்து தப்பிய ஒரு கைதியின் பழிவாங்கல் கதை

**ஸ்ரான்லி மினி 'B'**
10-30, 2-30
கமல் - ஊர்வசி
**அந்தஒரு நிமிடம்**

**பவித்ரா மினி**
கஸ்தூரியார் வீதி
(யாழ். இந்துக்கல்லூரியடி)
10-30, 2-30, 4-30, 6-30
LAND OF THE BROWLION
கராட்டிச் சண்டைப் படம். (கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

**லதா மினி**
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-30
**"X-RAY"**
Chip – Lucia
சிறுவயதில் காதலில் விரக்தியுற்ற ஒரு யுவதியின் பழிவாங்கும் பயங்கர கொலைகள்

**பிரிவு II**
**A/L 87**
கலை வர்த்தகம்
விஞ்ஞான கணித வகுப்புக்கள்
ஆரம்பம்: 10-07-85 மாலை 4-00 மணி
விபரங்கட்கு:
**NIRU TUITION CENTRE**
STATION ROAD, KONDAVIL
BRANCH: KOKUVIL
4219

**WANTED – BOOK-KEEPER**
A well experienced Book-Keeper conversant in Company Accounts and able to maintain a set of books independantly upto monthly Trial Balance Level, for immediate appointment Apply on or before 10th July 1985 with copies of testimonials and addresses of 03 referees. Salary negotiable.
GENERAL MANAGER,
Eelanadu Limited,
Jaffna.
4167

**தேவை**
**சோடா அடைக்கும் இயந்திரம்**
Carbon di oxide வாயுவைக் கலந்து, பானங்களைப் போத்தலில் அடைக்கும் இயந்திரம் (பழையதாயினும்) தேவை. தொடர்பு கொள்ளவும்: விளம்பரதாரர் M 14. மே/பா dyn ads, 476, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

**நிரூ டியூசன் சென்றர்**
புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்
**O/L DAY CLASSES**
ஆரம்பம்: 10- 07- 85, காலை 8-30
பிரிவு II- மாலை வகுப்புக்கள்:
ஆரம்பம்: 10- 07- 85, மாலை 3-00
4218

பாஸ்போர்ட் ✯ விசா (இந்தியா)
ஐரோப்பிய நாடுகளுக்கு டிக்கட்
தாமதமின்றிப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
**செல்வா ட்ரவல்ஸ்**
(கொழும்பு)
விபரங்களுக்கு:
செ. சிவபாதம் (சிவா) 'சவுதி அகம்' குருப்பசிட்டி
இ. குகன் மயிலிட்டி தெற்கு தெல்லிப்பழை
(4174)

**அறிவித்தல்**
யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதி 149-ம் இலக்க வீட்டில் வசித்தவரும் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 237-ம் இலக்கக்கடையில் (தாமோதர விலாஸ் அருகில்) நகைவியாபாரம் செய்து வந்தவருமாகிய மீரான் முகிதீன் மரைக்கார்த்தம்பி இறந்து விட்டார். அவருடைய மரணச்சொத்தின் மீது உரிமை கோருவோர் எவராவது இருந்தால் அவர்கள் யாவரும் இன்றிலிருந்து இதனடுத்த 14 நாட்களுக்குள் தங்கள் உரிமை சம்பந்தமான விபரங்களை எழுத்து மூலமாக இதன் கீழ்க்காணப்படும் விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு இத்தால் வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.
மரைக்கார்த்தம்பி கைம்பெண் செய்னம்பு
மே/பா. எம். எம். அப்துல் காதர் அன் பிறதேஸ்
97 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
4221

## சாட்சியமளிக்கவிரும்புவோர்

# மரணவிசாரணை அதிகாரியை தொடர்புகொள்ளவும்!

### சிறுவனின் சடலம் ஒப்படைக்கப்படவில்லை!

(யாழ்ப்பாணம்)

பரந்தன் நவஜீவனத்திலிருந்து ஒரு டாக்டரினால் பொறுப்பேற்கப்பட்டு, அவர் இல்லத்தில் உதவியாளனாகப் பணியாற்றிய 12 வயதுச் சிறுவன் திடீரென 'அம்மா அம்மா' என்று கதறியபடி விழுந்து துடிதுடித்து வாயால் நுரை தள்ளிய பின் மரணமான சம்பவம் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது.

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியைச் சேர்ந்த ரவியின் (12 வயது) மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

யாழ். மரண விசாரணை அதிகாரி க கேசவன் நேற்று மரண விசாரணை நடத்தினார்.

மரண விசாரணையின் பின் இச்சிறுவனின் சடலம் எவரிடமும் ஒப்படைக்கப்படவில்லை உறவினரின் வருகைக்காக யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தகவல் கொடுக்க விரும்புவோர் அல்லது சாட்சியமளிக்க விரும்புவோர் உடனடியாக தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு மரண விசாரணை அதிகாரி தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணத்தை சேர்ந்த டாக்டர் சாட்சியமளிக்கையில் இறந்த சிறுவனை ஒன்றரை வருடத்தின் முன் பரந்தன் நவஜீவனத்திலிருந்து பொறுப்பேற்றதாகவும்: அச்சிறுவன் தன் வீட்டில் உதவியாளனாக பணியாற்றி வந்ததாகவும் ஒன்றரை மாதத்திற்கு முன் இச்சிறுவன் காணாமல் போய் விட்டதாகவும், 15 நாட்களுக்கு பின் பக்கத்து வீட்டிலிருப்பவர், இச்சிறுவனை சுதுமலையிலிருந்து கூட்டிவந்ததாகவும் சம்பவதினம் காலை 10-40 மணிக்கு ஆஸ்பத்திரியில் இருந்த போது தகவல் கிடைத்து வீட்டிற்கு வந்ததாகவும் அப்போது சிறுவனின் சடலம் இல்லை என்றும் இனந்தெரியாத எட்டு இளைஞர்கள் வீட்டிலிருந்த சடலத்தை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்க கொண்டு சென்றுவிட்டதாக அறிந்து சவச்சாலைக்கு சென்று சடலத்தை அடையாளம் காட்டியதாகவும் கூறினார். டாக்டர் வீட்டு சமையல் காரர் லட்சுமணன் துரைசாமி (73 வயது) சாட்சியமளிக்கையில், 2 வருடமாக சமையல் வேலை செய்து வருவதாகவும், சம்பவதினம் காலை இறந்தவர் டாக்டரின் காருக்கு ஒயில் விட்டுவிட்டு பைப்பில் கைகழுவிக்கொண்டிருந்ததாகவும், பின் 'அம்மா அம்மா' என்று குளறியபடி வீட்டு முன்படியில் துடிதுடித்துக் கொண்டு வாயால் நுரைதள்ளக் கிடந்ததாகவும், தனியார் டாக்டரிடம் கொண்டுபோனபோது, அவர் ஊசி ஏற்றியபின் சிறுவன் இறந்துவிட்டதாகக்கூறியதாகவும், அதன் பின் சடலத்தை வீட்டிற்குக் கொண்டு வந்ததாகவும், இனந்தெரியாத 8 பேர் வந்து சடலத்தை காரில் ஆஸ்பத்திரிக்குகொண்டுபோனதாகவும் கூறினார்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்திப் போடப்பட்டுள்ளது. [க]


லண்டனில்
ஈழநாடு
கிடைக்குமிடம்

GEET GOONJAN
270, UPPER TOOTING ROAD
LONDON S W 17,

விநியோகஸ்தர்:
லண்டன் முரசு
பிரசுரம்

4207


## பிரேத பரிசோதனை செய்ய மறுப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். சட்டவைத்திய அதிகாரிக்குப் பதிலாகக் கடமையாற்றும் டாக்டர் ஒருவர், பிரேதஅறையிலுள்ள வேலைக்காரச் சிறுவனின் சடலத்தைப் பரிசோதனை செய்ய தமக்கு அனுபவம் காணாது என்று நேற்று மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்ட சுகாதாரப் பணிப்பாளருக்கு இது தெரிவிக்கப்பட்டதும் வேறுவைத்திய அதிகாரி ஒருவர் அச்சிறுவனின் சடலத்தை இன்று பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம்.

யாழ் நகரில் டாக்டர் ஒருவரின் வீட்டில் வேலைக்காரனாக இருந்து வந்த சிறுவன் நேற்று முன்தினம் மரணமானதும் அச்சிறுவனின் சடலத்தை இளைஞர் கோஷ்டி ஒன்று யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்து சேர்த்ததும் தெரிந்ததே. (மா)

## மூதூர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆஜரான சட்டத்தரணி கே. வி. மகேந்திரன் இவர்களை விடுதலை செய்யும்படி சட்ட மாஅதிபர் திணைக்களத்துக்கு வேண்டுகோள்விடுத்திருந்தார்.

இதனையடுத்து இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களைப் பரிசீலித்த சட்ட மாஅதிபர் திணைக்களம் இவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கமுடியாதெனத் தெரிவித்து இவர்களை விடுதலை செய்யும்படி பணித்துள்ளது.

## காவலில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை சுமார் 125 தமிழ் இளைஞர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஆதாரங்கள் இருப்பதால் அவர்கள் மீது யூரர்களற்ற வழக்கு விசாரணைகளை ஆரம்பிக்கும்படியும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தவிர காலி 'பூஸா' முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்தும்படியும், அவர்களில் பயங்கரவாதச் சம்பங்களுடன் சம்பந்தப்படாதவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறும் பாதுகாப்பமைச்சு உத்தரவிட்டுள்ளது.

## பொலிசார்......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பில் அறிவிக்கப்பட்டது.

நெற்களஞ்சிய மொன்றில் இடம் பெற்ற கொள்ளை சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்காக பொலிஸ் கோஷ்டி ஒன்று சென்று கொண்டிருந்த போது சீருடை அணிந்த தீவிரவாதிகள் குழு ஒன்று எதிர்ப்பட்டதாகவும்; அப்பொழுது பொலிஸரால் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போதே அத்தீவிரவாதி கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. (ரா)

## அரசு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை வலுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது'' என்று நேற்று சென்னையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் அந்த அறிக்கையில் மேலும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி ஆயுதங்களை வாங்குவதற்காகவே தென்கொரியா சென்றிருப்பதாகவும், தமிழ்ப் பகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ள சிங்களப் பிரஜைகளுக்கு இலங்கை அரசு ஆயுதங்களை வழங்கி வருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளது. [ரா]

## பொய் சொல்லாது...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயர் தியோகுப்பிள்ளை, ஆயர் ஜோய் குணவர்த்தன ஆகியோரின் கரங்களில் அவர்களின் மோதிரங்கள்மீது முத்தமிட்டேன். பிதா மைக்கேல் சுவாமியைக் கண்டு அழுதேன்.

அப்போது ஆயர் தியோகுப்பிள்ளை என்னை அமரச்செய்து, ''ஏன் அழுகிறீர்? அழவேண்டாம்.

உண்மையைக் கூறுங்கள். பொய் சொல்ல வேண்டாம். நான் உங்களுடனிருக்கிறேன்'' என்றார்.

''என்னை நித்திரை கொள்ள விடுகிறார்களில்லை. அடிக்கிறார்கள். பொய் சொல்லச்சொல்கிறார்கள். சித்திரவதை செய்கிறார்கள். என்னுடன் சம்பந்தமில்லாதவற்றை என்மீது சுமத்துகிறார்கள்.

உதாரணமாக நெல்லியடிக் கொலைகளை என்மீது சுமத்துகிறார்கள். அவர்களுடன் ஒத்துழைக்கமறுத்தால் 20 வருடங்கள் சிறையிலிருக்க நேரிடும் எனப் பயமுறுத்துகிறார்கள்'' என்று ஆயரிடம் நான் கூறினேன்.

''வண பிதா பேர்னாட்குயின்டஸ் என்னைப் பார்த்து, நீங்கள் வேதனையடையும்போது சகல குருமாரும் உங்களுடன் இருப்பார்கள். நாம் அனைவரும் உங்களுக்காகவும், ஏனைய குருமாருக்காகவும் பிரார்த்திப்போம் என்றார்.''

யாழ். ஆயர் அப்போது என்னிடம், சிங்கள மொழிபேசும் ஆயர்களும் உங்களுடனிருப்பதைத் தெரியப்படுத்தவே ஆயர் அதிவண ஜோய் குணவர்த்தன அநுராதபுரத்திலிருந்து இங்கே வந்துள்ளார் என்று தெரிவித்தார்.

## இந்திய அரசு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், தலைவர் திரு. எம் சிவசிதம்பரம், திருமலை முன்னாள் எம், பி ஆர். சம்பந்தன் ஆகியோர் அடங்குவர்.

கூட்டணியின் ''பொலிட்பீரோ'' கூட்ட முடிவில் நிருபர்களுக்கு விடுக்கப்பட்ட அறிக்கையில் பூட்டான் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் இலங்கைக் குழுவில் அரசியல் முடிவுகளை எடுக்க முடியாத வழக்கறிஞர்களும், அரச ஊழியர்களும் இடம்பெறுவது கேலிக்கூத்தாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் பூட்டான் பேச்சுவார்த்தையில் விடுதலைப் போராளிகள் கலந்துகொள்ள வேண்டும் என்பதைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒப்புக்கொள்கிறது என்றும், இலங்கை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியோ அல்லது இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் பிரச்சார சாதனங்களோ தமிழ் இளைஞர்களை ஆத்திரமூட்டும்வகையில் அறிக்கைகளை வெளியிடக்கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது. (ரா)

## மரண அறிவித்தல்

### செ. கந்தையா

செ. கந்தையா (சாவகச்சேரி மட்டுவில் தெற்கைச் சேர்ந்தஓய்வுபெற்றவைத்தியஆய்வுகூட நுட்பவியலாளர் M L.T.) காலமானார் இவர் பூரணத்தின் அன்புக்கணவரும். சர்வேஸ்வரியின் அன்புத் தந்தையும், சட்டத்தரணி கா. பாக்கியலிங்கத்தின் மாமனாரும், உமா, றஜீவ், சுஜீவ் ஆகியோரின் பாட்டனாரும் ஆவார் இவர் 04 07-1985 ம் திகதி காலமானார். ஈமக்கிரியைகள் 60-07-1985 அன்று (சனிக்கிழமை காலை) நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

4235

## மரண அறிவித்தல்

### க. வைரவநாதன்

இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபரும், பிரபல சட்டத்தரணியும், சமாதான நீதவானும், முன்னாள் குப்பிழான் கிராமோதய சபை, கிராம முன்னேற்றச் சபை, சனசமூக நிலையம், கோப்பாய் தெற்கு பிரஜைகள் குழு ஆகியவற்றின் தலைவரும், மல்லாகம் சட்டத்தரணிகள் சபைச் செயலாளரும் ஆகிய வைரவநாதன் அவர்கள் சிவபதமடைந்துள்ளார்.

இவர் காலஞ்சென்ற குப்பிழான் கந்தையா தம்பதிகளின் புதல்வரும், கட்டைப்பிராய் காலஞ்சென்ற பாடசாலை அதிபர் பொ. நடராசா தம்பதிகளின் மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், யாழ்/திருக்குடும்ப கன்னியர்மட சங்கீத ஆசிரியை பிரேமாவதி, புனிதவதி (இலண்டன்), புஸ்பவதி (இலண்டன்), குகநாதன், சற்குருநாதன், பாலமுருகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தந்தையும் ஸ்ரீஸ்கந்தராசா (நீர்ப்பாசனத் திணைக்களம், ஜெயச்சந்திரன் (இலண்டன்), குணசிங்கம் (ஓமான்) ஆகியோரின் அன்பு மாமனாரும், இளைப்பாறிய பாடசாலை அதிபர் காங்கேசு, திருமதி தில்லைமுத்து, காலஞ்சென்ற சபாரத்தினம் ஆகியோரின் சகோதரரும், சோபனா, அஜேஜனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (5-7-85) பிற்பகல் 2 மணியளவில் கோப்பாய் தெற்கு முருகவாசாவில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ள வேண்டப்படுகின்றனர்.

தகவல் கொடுப்பவர்: ந. ஸ்ரீஸ்கந்தராசா

4234

## மருதனமடத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் முன்னூறு ரூபாவை இணுவிலைச் சேர்ந்த திரு. ஆ. சின்னையா என்பவர் இந்த வழிப்பறி மூலம் இழந்துள்ளார்.

## பூட்டான்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் வகையிலேயே இவர் கூட்டிச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இலங்கைக்குழுவினர் இன்று இரவு 7 - 15 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து பூட்டான் பயணமாவார்கள்

அங்கு பேச்சுக்களை முடித்துக் கொண்டபின்னர் எதிர்வரும் 14-ந் திகதி இவர்கள் தாயகம் திரும்புவார்கள் எனவும் அவசிய மேற்படின் அங்கு தங்குவது நீடிக்கப்படலாம் எனவும தெரிவிக்கப்பட்டது.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### பஞ்சா அம்பலவாணர்

முன்னாள் இலங்கை கடற்படை லெப்டினன்ட் கொமாண்டர் கப்டின் (CAPTAIN) பஞ்சா அம்பலவாணர் மத்திய கிழக்கு ஆழ்கடலில் அகால மரணமடைந்தார்.

இவர் சுகந்தமலரின் அன்புக் கணவரும், சஞ்சீவ், ரவீன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி பாலரத்தினம் (மானிப்பாய்) திருமதி ஜெகநாதன் (கல்முனை), பாலா அம்பலவாணர் (NEON-X), T. அம்பலவாணர்(RESOURCES and MANANGMENT SERVICES G C T அம்பலவாணர் BOSTON U S A), புவி அம்பலவாணர் GEORGE TOWN GUANA), ஜெகா அம்பலவாணர் (FORMALY OF CEYLON SERVICES and SUPPLIES), திருமதி நகுலா நாகேந்திரன் (COLOMBO), விக்னா (TRINCO) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் நினைவஞ்சலி ஆராதனை 6-7-1985 சனிக்கிழமை காலை 7-30 மணிக்கு St JAMES CHURCH நல்லூரில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் சகலரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்

மனைவி பிள்ளைகள், சகோதர சகோதரிகள்.

332, நாவலர் வீதி.
நல்லூர், யாழ்ப்பாணம். (4195)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜூலை மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone; 22389 ,24126.